# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை - 2023 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**கண்ணோட்டம்:**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கிய 3 பகுதிகளை கொண்டுள்ளது.

1. **பகுதி A 20 புள்ளிகளைக்** கொண்ட நான்கு (1-4) கட்டாய வினாக்களைக் கொண்டது.
2. **பகுதி B 30 புள்ளிகளைக்** கொண்ட மூன்று (5-7) கட்டாய வினாக்களைக் கொண்டது
3. **பகுதி C 50 புள்ளிகளைக்** கொண்ட மூன்று (8-10) கட்டாய வினாக்களைக் கொண்டது

**பொதுவான கருத்துக்கள்:**
இவ்வினாத்தாளிற்கு பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயற்றிறன் திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. ஆனால் சில பரீட்ச்சார்த்திகள் இவ்வினாவிற்கு சிறப்பாக விடையளித்துள்ளனர்.

**பகுதி ரீதியான செயற்றிறன்:**
**பகுதி A 20 புள்ளிகளைக்** கொண்ட நான்கு கட்டாய வினாக்களைக் கொண்டது இப்பகுதிப்பான பரீட்ச்சார்திகளின் செயற்றிறன் திருப்பதிகரமானதாக உள்ளது. இப்பிரிவுக்கான வினா ரீதியான செயற்றிறன் பின்வருமாறு.

| **வினா இல.** | **செயற்திறன் மட்டம்.** |
|---|---|
| 1 | திருப்திகரமானது |
| 2 | திருப்தியற்றது |
| 3 | திருப்தியற்றது |
| 4 | நன்று |

**பகுதி B 30 புள்ளிகளைக்** கொண்ட மூன்று கட்டாய வினாக்களைக் கொண்டது. இப்பகுதிப்பான பரீட்ச்சார்திகளின் செயற்றிறன் திருப்பதிகரமானதாக உள்ளது. இப்பிரிவுக்கான வினா ரீதியான செயற்றிறன் பின்வருமாறு.

| **வினா இல.** | **செயற்திறன் மட்டம்.** |
|---|---|
| 5 | நன்று |
| 6 | நன்று |
| 7 | திருப்திகரமானது |

**பகுதி C 50 புள்ளிகளைக்** கொண்ட மூன்று கட்டாய வினாக்களைக் கொண்டது. இப்பகுதிப்பான பரீட்ச்சார்திகளின் செயற்றிறன் திருப்பதிகரமாக இல்லை. இப்பிரிவுக்கான வினா ரீதியான செயற்றிறன் பின்வருமாறு. :

| **வினா இல.** | **செயற்திறன் மட்டம்** |
|---|---|
| 8 | திருப்திகரமாக இல்லை |
| 9 | திருப்திகரமானது |
| 10 | திருப்திகரமானது |

## பகுதி A

**வினா இல. 01**

இவ் வினா தொழிற்படு மூலதன சுழற்சியினை எவ்வாறு கணிப்பிடுவது என்பதை சோதித்துள்ளது.

**செயற்திறன்:**

திருப்திகரமானது.

**பொதுவான தவறுகள்:**

(1) சில பரீட்சார்த்திகள் சென்மதியாளர் கொடுப்பனவுக் காலத்தினை சரியாக கணிப்பிட்டிருக்கவில்லை.

(2) ஆரம்ப மற்றும் இறுதி நிலுவைகளை 2 ஆல் வகுப்பதன் மூலம் சில பரீட்சார்த்திகள் சராசரி கடன் வழங்குநர்கள்/சராசரி இருப்புகளை கணக்கிடவில்லை.

(3) பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் கொள்வனவுகளை சரியாகக் கணக்கிடவில்லை. கடன்கொடுத்தோரின் தீர்வு காலத்தை அவர்களால் சரியாக கணக்கிட முடியவில்லை. எனவே, தொழிற்படு மூலதனக் கணக்கீடு தவறானது.

(4) சில வேட்பாளர்கள் தொழிற்படு மூலதனச் சுழற்சியைப் பெறுவதற்கு கடன்கொடுத்தோர் தீர்வுக் காலத்தை தவறாகக் கூட்டியுள்ளனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

பரீட்ச்சார்த்திகள் கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் பாடப்புத்தகத்தில் உள்ள கேள்விகளை பயிற்சி செய்ய வேண்டும்.

**வினா இலக்கம் 02**

இவ்வினா மேந்தலை அகத்துறிஞ்சல் கிரய முறையினை சோதித்துள்ளது.

**செயற்றிறன்:**

திருப்திகரமாக இல்லை.

**பொதுவான தவறுகள்:**

(1) பெரும்பாலான பரீட்சார்திகள் மேந்தலை அகத்துறிஞ்சல் வீதத்தை தவறாக கணிப்பிட்டுள்ளனர். மேலும் அவர்கள் இலாப கூற்றினை தயாரிப்பதற்கான மிகை அல்லது குறை ஏற்பாட்டினை விளங்கிக் கொள்ள இயலவில்லை.

(2) சிலர் அலகொன்றுக்கான கிரயத்தை தவறாக கணிப்பிட்டுள்ளனர். இதன்விளைவாக விற்பனைக் கிரயத்தை தவறாக கணிப்பிட்டுள்ளனர்.

(3) .சில பரீட்சார்த்திகள் உற்பத்தியல்லாத மேந்நலைகளை மொத்த இலாபத்திலிருந்து கழிப்பதற்கு பதிலாக விற்பனைக் கிரயத்தில் உள்ளடக்கியுள்ளனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

விண்ணப்பதாரர்கள் கடந்த கால வினாத்தாள்களில் இதே போன்ற கேள்விகளைப் பயிற்சி செய்ய வேண்டும் மற்றும் அறிவைப் புதுப்பிக்க கூடுதல் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்களைப் படிக்க வேண்டும்.

**வினா இலக்கம் 03**

இவ்வினா நெகிழ்ச்சியுடைய பாதீட்டினை எவ்வாறு தயாரிப்பது என்பதை சோதிக்கின்றது.

**செயற்றிறன்:**
திருப்திகரமாக இல்லை.

**பொதுவான தவறுகள்:**

(1) பெரும்பாலான பரீட்சார்திகள் இவ்வினாவிற்கு திருப்திகரமாக விடையளித்துள்ளனர்.

(2) ஆனால் சில பரீட்சார்திகள் ஒவ்வொரு விற்பனை மட்டத்துக்கான மாறும் கிரயத்தை சரியாக கணிப்படவில்லை.

(3) சில பரீட்சார்த்திகள் ஒவ்வொரு மட்டத்துக்குமான மாறும் கிரயத்தை சரியாக கணிப்பிடவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) விடை எழுதுவதற்கு முன்னர் வினாவினை ஒழுங்காக வாசிக்க வேண்டும்.

(2) ஒரே வகையான கடந்தகால வினாக்களை பயிற்சி செய்தல்

(3) எல்லா செய்முறைகளையும் தெளிவாக காட்ட வேண்டும்.

**வினா இலக்கம் 04**

நியம கிரயத்தின் மீதான கோட்பாட்டு அறிவினை இவ்வினா சோதித்துள்ளது.

**செயற்றிறன்:**
நன்று.

**பொதுவான தவறுகள்:**

(1) இவ்வினாவிற்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்துள்ளனர்.

(2) சில பரீட்ச்சார்திகள் சிறந்த கருத்துக்களை குறிப்பிட்டிருக்விலலை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

விண்ணப்பதாரர்கள் கடந்த கால வினாத்தாள்களில் இதே போன்ற கேள்விகளைப் பயிற்சி செய்ய வேண்டும் மற்றும் கூடுதல் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்களைப் படிக்க வேண்டும்.

## பகுதி B

**வினா இலக்கம் 05**

இவ்வினா காசுப் பாதீட்டினை எவ்வாறு தயாரிப்பது என சோதித்துள்ளது.

**செயற்றிறன்:**
நன்று.

**பொதுவான தவறுகள்:**

(1) விநியோகம் செய்யப்பட்ட 60 நாட்களுக்கு முன்னர் முன்கூட்டியே பணம் வசூலிப்பது உட்பட விற்பனையிலிருந்து வரும் பண வரவுகள் பல பரீட்சார்த்திகளால் சரியாக அடையாளம் காணப்படவில்லை.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வட்டி வருமானத்தைக் கண்டறியத் தவறிவிட்டனர். இருப்பினும், சில பரீட்சார்த்திகள் பரீட்சார்த்திகள் ஆண்டுக்கு 6% வீதத்தைப் பயன்படுத்தி வட்டி வருமானத்தை சரியாகக் கணக்கிட்டுள்ளனர், ஆனால் ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கான மாதாந்த வட்டி வருமானத்தைக் காட்ட 12 ஆல் வகுக்கத் தவறிவிட்டனர்.

(3) மாதாந்திர வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்குக் கேள்வி கேட்கப்பட்டாலும், சில பரீட்சார்த்திகள் காலாண்டு பாதீட்டினை காட்டியுள்ளனர்.

(4) சில வேட்பாளர்கள் தேறிய காசுப்பாய்ச்சல் மற்றும் இறுதி காசு இருப்புகளை குறிப்பிட்டிருக்கவில்லை..

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

கடந்தகால வினாத்தாள்களைப் பயிற்சி செய்யுங்கள் - ஒவ்வொரு தேர்விலும் இதே மாதிரியான கேள்விகள் மீண்டும் மீண்டும் சோதிக்கப்பட்டன. எனவே, கடந்த கால வினாத்தாள்களைப் படிக்கவும்.

**வினா இலக்கம் 06**

இந்தக் கேள்வி கட்டுப்படுத்தும் காரணியின் அடையாளத்தையும், கட்டுப்படுத்தும் காரணியின் அடிப்படையில் உற்பத்திக் கலவையின் கணிப்பீட்டினையும் சோதித்துள்ளது.

**செயற்றிறன்:**

நன்று.

**பொதுவான தவறுகள்**

(1) சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளை மட்டுமே காட்டியுள்ளனர் ஆனால் கணிப்பீடுகளின் அடிப்படையில் கட்டுப்படுத்தும் காரணியைக் காட்டவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் கட்டுப்படுத்தும் காரணி மற்றும் மேலதிக உற்பத்திக் கலவைக் கணிப்பீட்டில் ஒரு அலகுக்கான கிலோவை தவறாக பயன்படுத்தியுள்ளனர்.

(3) சில பரீட்சார்த்திகள் கட்டுப்படுத்தும் காரணிக்கான பங்களிப்பை சரியாக கணக்கிடவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் மேலதிக உற்பத்திக் கலவையை குறிப்பிடவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) கடந்தகால வினாத்தாள்களை பயிற்சித்தல்

(2) எப்பொழுதும் உங்களுடைய செய்முறைகளைக் காட்டவும்

(3) கணிப்பீட்டு தவறுகளைத் தவிர்க்கவும்

(4) கட்டுப்படுத்தும் காரணி மீதான அறிவினை வளர்க்க வேண்டும்.

### வினா இலக்கம் 07

இந்தக் கேள்வியானது சாதாரண வாக்களிக்கும் பங்குகளின் விலை, மீளப்பெற முடியாத முன்னுரிமைப் பங்குகள், மீளப்பெறக்கூடிய தனிச்சங்கள் மற்றும் WACC என்பவற்றின் கணிப்பீட்டை சோதித்துள்ளது.

**செயற்றிறன்:**

திருப்திகரமானது.

**பொதுவான தவறுகள்:**

(1) பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் பகுதி (a) மற்றும் (b) க்கு சரியாக பதிலளித்தனர். அவர்கள் பகுதி (c) மற்றும் (d) ஆகியவற்றில் தவறு இழைத்துள்ளனர்.

(2) பல பரீட்ச்சார்த்திகளுக்கு பங்குகளின் விலை என்னவென்று தெரியாது. சதவீதத்திற்கு பதிலாக ரூபாயில் பதிலளித்துள்ளனர்.

(3) 1 - 6 ஆண்டுக்கான வட்டி விகிதத்தைக் கணக்கிடுவதில் பெரும்பாலானோர் தவறுகளைச் செய்துள்ளனர்.

(4) சில பரீட்சார்த்திகள் தனிச்சங்களின் விலையைக் கணக்கிடுவதற்கு வரியைக் கருத்தில் கொள்ளவில்லை.

(5) வினாவில் தற்போதைய சந்தை விலை கொடுக்கப்பட்டிருந்தாலும், சில பரீட்சார்த்திகள் மீட்டெடுக்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்கள்/மீட்க முடியாத முன்னுரிமைப் பங்குகளின் சந்தை பெறுமதியை அடைவதில் சிரமப்பட்டுள்ளனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

இந்தக் கேள்விகள் மீண்டும் மீண்டும் சோதிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் அதே தவறுகள் மேற்கொள்ளபட்டுள்ளன.

(1) கடந்தகால வினாத்தாள்களைப் பயிற்சி செய்யுங்கள் - ஒவ்வொரு தேர்விலும் இதே மாதிரியான கேள்விகள் மீண்டும் மீண்டும் சோதிக்கப்பட்டன. எனவே, கடந்த கால வினாத்தாள்களைப் படிக்கவும்.

(2) சாதாரண பங்குகள், மீளப்பெற முடியாத முன்னுரிமைப் பங்குகள், மீட்டெடுக்கக்கூடிய கடன் பத்திரங்கள் மற்றும் WACC ஆகியவற்றின் விலைக்கான சமன்பாடுகளைப் படிக்கவும்.

## பகுதி C

### வினா இலக்கம் 08

இந்தக் கேள்வி பல்வேறு வகையான முரண்களைக் கணக்கிடும் திறனைப் பரிசோதிததுள்ளது.

**செயற்றிறன்:**

திருப்திகரமாக இல்லை.

**பொதுவாக தவறுகள்**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் அடிப்படை முரண்களாக இருந்தபோதிலும் அவற்றை சரியாக கணிப்பிட்டிருக்கவில்லை.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் முரண்களை கணிப்பதற்கான சமன்பாடு பற்றிய அறிவினை கொண்டிருக்கவில்லை.

(3) சமன்பாடு சரியாக தெரிந்திருந்த சில பரீட்சார்த்திகள் சமன்பாட்டில் விசேடமாக நேர் ஊழியக் கலவை முரண் மற்றும் நேர் ஊழிய விளைவு முரண் என்பவற்றில் தரவுகளை சரியாக பிரயோகித்திருக்கவில்லை.

(4) சில பரீட்சார்த்திகள் கணிக்கப்பட்ட முரண்களை சாதகமானவை அல்லது பாதகமானவை எனக் குறிப்பிடாததுடன் சில பரீட்சார்த்திகள் பாதகமான முரண்களை சாதகமாகவும் சாதகமான முரண்களை பாதகமாகவும் தவறாக இனங்கண்டுள்ளனர்.

**பரீட்சகரின் பரிந்துரை:**

இந்தக் கேள்விகள் மீண்டும் மீண்டும் சோதிக்கப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டும் அதே தவறுகள் மேற்கொள்ளபட்டுள்ளன.

(1) கடந்தகால வினாத்தாள்களை பயிற்சி செய்க. எப்போதும் செயன்முறைகளை காட்டுக.

(2) பாடப்புத்தகத்தை பின்பற்றி நடைமுறையில் பிரயோகப்படுத்துக.

(3) வேறுபட்ட சூழ்நிலைகளில் முரண்களின் சமன்பாடுகளை பயிற்சிசெய்ய வேண்டும்.

(4) முரண் பகுப்பாய்வில் சரியான பிரயோகத்துடன் சமன்பாடுகளை முன்னிலைப்படுத்தல்.

## வினா இலக்கம் 09

இவ்வினா நிகர இற்றைப் பெறுமதியில் செயற்றிட்ட மதிப்பீட்டின் பிரயோகம் மீதான அறிவினை சோதித்துள்ளது. மேலும் வெவ்வேறு ஆயுட்காலத்தின் கீழ் இரண்டு நேர்மறை NPV களுக்கான வருடாந்திர காரணி பிரயோகமும் சோதிக்கப்பட்டது. கூட்டுறவு வரி கணக்கீடு மற்றும் சீராக்கங்கள் NPV கணக்கீட்டின் கீழ் சோதிக்கப்பட்டது.

**செயற்திறன்**

திருப்பதிகரமானது.

**பொதுவான தவறுகள்:**

(1) பல பரீட்ச்சார்த்திகள் நேர்ப் பொருள், நேரடி உழைப்பு மற்றும் மாறும் மேந்தலைகள் ஆகியவற்றைக் கணக்கிடுவதற்கு கேள்வியின் வளர்ச்சியை எடுத்துக் கொள்ளவில்லை.

(2) பெரும்பாலான வேட்பாளர்கள் வரியினைத் தவறாகக் கணக்கிட்டுள்ளனர். வரி கணக்கிடும் போது சிலர் மூலதன கொடுப்பனவுகளை கருத்தில் கொள்ளவில்லை.

(3) சில பரீட்ச்சார்த்திகள் தேய்மானம் மற்றும் மூலதன கொடுப்பனவுகளை காசு வெளிப்பாய்ச்சல்களாக தவறாக கருதுகின்றனர்.

(4) சில பரீட்ச்சார்த்திகள் தவறான விகிதங்களை மூலதனச் செலவாக 20% க்கு பதிலாக எடுத்துள்ளனர்.

(5) பெரும்பாலான பரீட்ச்சார்த்திகள் வளர்ச்சி அளவுகோலின் கீழ் விற்பனை வருவாயை சரியாகக் கணக்கிட்டு, மதிப்பீட்டிற்கு சரியாக பிரயோகித்துள்ளனர்.

(6) ரூ.4 மில்லியன் ஆரம்ப அகற்றல் மதிப்பு புதிய இயந்திரத்தின் பயனுள்ள ஆயுட்காலத்தின் முடிவில் காட்டப்பட்டுள்ளது.

(7) அந்த இரண்டு செயற்திட்டங்களுக்கும் வெவ்வேறு ஆயுட்காலம் இருப்பதால், ஒவ்வொரு திட்டத்திற்கும் வருடாந்திர NPV யைக் கணக்கிடுவதன் மூலம் பரீட்சார்த்திகள் உகந்த திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவில்லை

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

(1) பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தின் உதாரணங்கள் மற்றும் கடந்தகால வினாக்களை பயிற்சி செய்ய வேண்டும்.

(2) கணிப்பீட்டு தவறுகளை குறைக்க வேண்டும்

(3) பரீட்சார்த்திகள் அனைத்து செய்முறைகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**வினா இலக்கம் 10**

இவ்வினாவின் **பகுதி A** ஆனது செயன்முறைக் கிரயத்தின் அறிவினை சோதித்துள்ளது. சமான அலகுகள் மற்றும் செயற்பாட்டு கிரய கூற்றை தயாரிக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

கேள்வியின் **பகுதி B (a)** தொடர்புடைய செலவுகள் பதிவிடப்படுவதை சோதிக்கப்பட்டுள்ளது மற்றும் **பகுதி B (b)** கொடுக்கப்பட்ட தரவின் கீழ் பங்களிப்பு மற்றும் இலாபநட்டமற்ற விற்பனையைக் கணக்கிடுவதனை சோதித்துள்ளது.

**செயற்திறன்**

திருப்பதிகரமாகவுள்ளது.

**பொதுவான தவறுகள்:**

**பகுதி (A):**

(1) சில பரீட்சார்த்திகள் சமப்பாட்டு கிரயத்தை கணிக்கும் போது ஆரம்ப குறைவேலைப் பெறுமதியை எடுக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் சமப்பாட்டு அலகுகளை கணிக்கும் போது சாதாரண நட்டத்தை கருத்தில் கொண்டுள்ளனர்.

(3) சில பரீட்சார்த்திகள் அலகுக்கான கிரயத்தை கணிக்கும் போது நேரடி மூலப்பொருள் கிரயத்திலிருந்து சாதாரண நட்டத்தின் விற்பனைப் பெறுமதியை கழிப்பதை கருத்தில் எடுக்கவில்லை.

**பகுதி (B) (a):**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிக்கவில்லை. பல பரீட்சார்த்திகள் தொடர்புடைய கிரயத்தை சரியாகக் கண்டறியவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் சந்தை ஆராய்ச்சி செலவினங்களை தொடர்பற்ற கிரயமாக அடையாளம் காணவில்லை.

**பகுதி (B) (b):**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இணைந்த விலை வருமான விகிதத்தை சரியாக கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதனால் சரியான இலாபநட்டமற்ற புள்ளியினை சரியாக கணிப்பிட முடியவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரை:**

(1) பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தின் உதாரணங்கள் மற்றும் கடந்தகால வினாக்களை பயிற்சி செய்ய வேண்டும்.

(2) பரீட்சார்த்திகள் அனைத்து செய்முறைகளையும் தெளிவாக வேண்டும்.

- * * * -